**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**OS.105/2022**

பெயர் : சரோஜா ( PW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 09.04.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**13 முதல் 15 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் தாயார் கோவிந்தம்மாள் 1992 ல் இறந்தார். என் தகப்பனார் 1959 ல் இறந்தார். என் தாயாருக்கு மாரிமுத்து மற்றும் நான் தான் வாரிசு. 2 ம் பிரதிவாதி சரஸ்வதி மாரிமுத்துவின் 2 ம் மனைவி என்றால் சரிதான். மாரிமுத்து 2013 ல் இறந்துபோனார். தாவா சொத்துக்கள் கோவிந்தம்மாள் பெயரில் வாங்கப்பட்டவை என்பதன் அடிப்படையில் வழக்கு போட்டுள்ளேன். என் தந்தை இறந்த போது நான் 6 வகுப்பு படித்தேன். மாரிமுத்து மற்றும் அவரது மனைவியின் பெயரில் சீர்காழி தாலுக்காவில் நிறைய சொத்துக்கள் உள்ளன என்றால் அவ்வாறு இருப்பதாக தெரியவில்லை. 14, 15 ம் பிரதிவாதிகள் எதன் அடிப்படையில் சேர்த்துள்ளேன் என்றால் சொத்துக்களை அவர்கள் வாங்கி உள்ளதாக தெரிய வந்தது. 14, 15 ம் பிரதிவாதிகள் வாங்கியதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 1 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் மாரிமுத்துவால் கிரயம் செய்யப்பட்டது என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் 13 ம் பிரதிவாதியை சேர்த்துள்ளோம். 14, 15 ம் பிரதிவாதிகள் முற்றிலும் வழக்கிற்கு தொடர்பில்லாத நபர்கள் என்பதால் வழக்கில் தேவையற்ற நபர்களை சேர்த்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் மாரிமுத்துவுடன் சேர்ந்து கூட்டு அனுபவமாக இருந்தது குறித்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நானும் என் சகோதரர் மாரிமுத்துவும் வீட்டு விசேஷங்களில் கலந்துக் கொண்டதாக சொல்லி உள்ளேன் என்றாலும் அதற்கும் வழக்கு சொத்தின் கூட்டு அனுபவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 கிரய ஆவணத்தில் கண்ட சொத்து என் தந்தை உயிருடன் இருக்கும் போது வாங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ன் தந்தை உயிருடன் இருக்கும் போது வாங்கப்பட்டது என்றால் சரிதான். இரண்டு சொத்துக்கள் மட்டும் தான் என் தகப்பனாரால் என் தாயார் பெயரில் வாங்கி வைக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 50 ஆண்டுகளுக்கு மேலாக நான் சீர்காழில் அரசு மற்றும் தனியார்

மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி உள்ளேன். மாரிமுத்துவும் சீர்காழி வட்டத்தில் பிரபலமான நபர் என்றால் தெரியவில்லை. என் குடும்பம் சீர்காழியில் பிரபலமான குடும்பம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 கண்ட சொத்துக்கள் மாரிமுத்துவின் வருமானத்தை கொண்டு தாயார் பெயரில் பாசத்தின் அடிப்படையில் வாங்கப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 உள்ள சொத்துக்களும் மாரிமுத்துவின் வருமானத்தை கொண்டு தாயார் பெயரில் பாசத்தின் அடிப்படையில் வாங்கப்பட்டவை என்றால் சரியல்ல. என் தந்தையின் இறப்பிற்கு பின்னர் என் தாயருக்கு சொத்துக்கள் வாங்குவதற்கானாக வசதிகள் இல்லை என்றாலும் என் தாயாரையும் என்னையும் என் சகோதரர் மாரிமுத்து தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 3, 4 சொத்துக்களுக்கு எவ்வித பாகபிரிவினையும் நான் கேட்க இயலாது என்றால் சரியல்ல. வழகது சொத்துக்களில் எனக்கு எவ்வித பாக உரிமையும் இல்லை என்றாலும் பாக கிடைக்ககூடியது அல்ல எ ன்றாலும் சரியல்ல. என் தாயார் 1992 ல் இறந்த பின்னர் 1995 ல் வழகது தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் 18 ஆண்டுகள் கழித்து வழக்குதாக்கல் செய்து பாகம் கேட்க இயலாது என்பதால் என் வழக்கு தள்ளுபடிசெய்யக்கூடியது என்றால் சரியல்ல. என் தாயாரின் இறப்பிற்கு பின்னர் என் சகோதரர் இருக்கும் வரை அவரிடம்நான் பாகம் கேட்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே வழக்கு சொத்துக்களில் பாகம் இருந்திருந்தால் என் தாயர் இறந்தவுடன் அல்லது என் சகோதரர் இறந்தவுடன் வழக்கு போட்டிருப்பேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் இறந்த பின்னர் 8 ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் மாரிமுத்துவிற்கு உரிமையானது என்பதன் அடிப்படையில் நான் உரிமை கோராமல் இருந்துள்ளேன் என்றாலும் தற்போது ரியல் எஸ்டேட் வியாபாரம் காரணமாக நிலங்களின் மதிப்பு கூடிவிட்டது என்பதால் நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்பு மாரிமுத்துவின் வாரிசுகளிடம் பாகம் கேட்டு அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் என் சகோதரருககும் அவர் இறக்கும் வரை சுமூகமான உறவு இருந்தது என்றால் சரிதான். அந்த அடிப்படையில் அவர் எந்தெந்த சொத்துக்கள் வாங்கினார் விற்றார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அவ்வாறு தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 13 ம் பிரதிவாதி 2 அயிட்ட சொத்துக்களை 2001 ல் வாங்கி உள்ளார் என்றால் சரிதான்.

வழக்கு 3 அயிட்ட சொத்துகளை 2005 ல் அனிதா வாங்கி உள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை ஒரு பகுதியை அனிதா வா'ங்கிய விபரம் அப்போது தெரியவில்லை. அந்த சொத்துக்கள் 13 ம் பிரதிவாதியால் சொத்துக்கள் வாங்கப்பட்ட விபரம் என் சகோதரர் மாரிமுத்து இறந்த பின்னர் தெரிந்தக் கொண்டேன். சகோதரர் இறந்தவுடன் தெரிந்திருந்தால் உடனடியாக வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலம் சொத்துக்களில் உரிமை இல்லாததால் தான் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 13 ம் பிரதிவாதி கிரயம் பெற்றதை பொறுத்து என் சகோரர் இறந்த பின்னர் தான் தெரிந்துக் கொண்டேன் என்பதை என் பிராதில் சொல்லி உள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 13 ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்களில் தற்போது பள்ளிக்கூட கட்டுமானங்கள் உள்ளது என்பதை தெரிந்துக்கொண்டேன். பள்ளிக்கட்டிடம் உள்ளது என்பதை பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பள்ளிக் கட்டடித்தை இடித்து பாகம் கொடுக்க வேண்டும்என்றறு பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் பிராதில் மாவட்ட ஆட்சியர், கல்விதுறை அதிகாரிகளுக்கு அனுமதி பெறாமல் கல்வி நிறுவம் நடத்துவதாதக அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 14, 15 பிரதிவாதிகள் சார்பில் வழக்கு சொத்துக்களில் எந்த வித கட்டுமானமும் இல்லை என்றாலும் தவறாக புரிந்துக் கொண்டு அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 15 ம் பிரதிவாதி கல்வி நிறுவனம் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது என்றால் சரிதான். 14, 15 ம் பிரதிவாதி மெட்ரிக் பள்ளி, CBSE பள்ளி மற்றும் கல்லூரிகளை பல்வேறு இடங்களில் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். புகழ் பெற்ற கல்வி நிறுவனங்களை நடத்துபவர்கள் அனுமதி பெறாமல் நடத்த மாட்டார்கள் என்றாலும் அவர்களுக்கு ஒரு அழுத்தத்தை கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் கல்வி துறை அதிகாரரிகளுக்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன் எனறாலும் அறிவிப்பில் கண்டுள்ள விபரங்கள் பொய்யானவை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 11 முதல் 14 வழக்கிற்கு முற்றிலும் தேவையற்ற ஆவணங்கள் என்பதால் எனக்கு வழக்கில் எவ்வித பலனும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 9 ம் குடும்ப ரீதியான ஆவணம் என்பதால் வழக்கிற்கு வலுசேர்க்கும் ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 10 ம் குடும்ப ரீதியான ஆவணம் என்பதால் வழக்கிற்கு வலுசேர்க்கும் ஆவணம் இல்லை என்றால் சமூகமாக இருந்தோம் என்பதை காட்ட தாக்கல் செய்த

ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 8 என் தாயார் கோவிந்தமள்ளாளுக்கு 14.05.2018 ல் வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். உண்மையிலேயே வழக்கு சொத்திற்கு எனக்கு உரிமை இருந்திருந்தால் என் தாயார் இறந்தவுடனேயே வாரிசு சான்று வாங்கி இருப்பேன் என்றாலும் 13 முதல் 15 பிரவாதிகளிடம் துர்லாபம் அடையும் நோக்கில் வாங்கி உள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் அவ்வாறு உரிமை இருப்பதாக வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும் ஊஸ்டர் அடிப்படையில் எனக்கு எந்த பாகமும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் 60 ஆண்டுகளுக்கு மேலாக மாரிமூத்துவின் தனிப்பட்ட உரிமை மற்றும் சுவாதீனத்தில் இருந்து வந்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. சொத்தின் உரிமையாளர் என்பதன் அடிப்படையில் 13 ம் பிரதிவாதிக்கு 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை கிரயம் கொடுத்துள்ளார்எ ன்றால் சரியல்ல. மாரிமுத்துவின் இறப்பிற்கு பின்னர் அவரது வாரிசுகளிடம் சொத்தில் பாகம் கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கோரிக்கை சட்டரீதியாகவே காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதால் வழக்கில் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. 1 முதல் 5 அடியிட்ட சொத்துக்களை நான் கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் தினமும் பார்த்துக கொண்டுஇருக்கிறேன். அந்த புல எண்களில் கட்டிடம் உள்ளது என்பதை உறுதி செய்தேனா என்றால் அதற்கு அவசியம் இல்லை. அனுமானத்தின் அடிப்படையில் தான் நான் கட்டிடம் இருப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யாக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. பள்ளிக் கட்டிடம் அனிதா வாங்கி சொத்தில் உள்ளது என்பதான் அடிப்படையில் தான வருவாய் துறை மற்றும் கல்வி துறை அதிகாரரிகளுக்குஅறிவிபபு அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மேற்படி அதிகாரிகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அனிதா விற்கு விற்ற சொத்துக்களில் 2 சொத்துக்கள் 25 ஆண்டுகளுக்கு மேலாகவும் 3 சொத்துக்கள் 20 ஆண்டுகளாக உள்ள விபரம் தெரிந்துக் ொகண்டேன். அவர்கள் வசம் உள்ள தெரிந்துக் கொண்டேனாஎ ன்றால்தெரிந்துக் கொண்டேன். அனிதா பெயரில் உள்ள கிரய ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. அவ்வாறு

விளம்புகை பரிகாரம் கேட்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது குறைபாடுஉடையது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**7, 12 ம் பிரதிவாதிகள் தரப்பில் 13 முதல் 15 ம் பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**